கிராமின் கிருஷி மவுசம் சேவா
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 31-10-2023**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-10-31 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-11-01 | 2023-11-02 | 2023-11-03 | 2023-11-04 | 2023-11-05 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 18.0 | 12.0 | 10.0 | 12.0 | 40.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 31.0 | 31.0 | 31.0 | 30.0 | 30.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 24.0 | 24.0 | 24.0 | 23.0 | 23.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 88 | 88 | 88 | 86 | 86 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 74 | 74 | 74 | 72 | 72 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 8 | 8 | 8 | 7 | 7 |
| காற்றின் திசை (கோணம்) | 50 | 50 | 50 | 70 | 70 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 6 | 6 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

நவம்பர் முதல் வாரத்தில் மிதமானது முதல் கனமழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலை 30.0°C - 31.0°C எனும் வேறுபாட்டிலும், குறைந்தபட்ச வெப்ப நிலை 23.0°C - 24.0°C. வேறுபாட்டிலும் இருக்கும். வானம் அடுத்த ஐந்து நாட்களுக்கு மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 7 - 8 கிலோமீட்டர் வேகம் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

## பொது ஆலோசனை:

மழை காலங்களில் வெப்பநிலை மாற்றத்தை எதிர்கொள்ளவும் நோய் எதிர்ப்பாற்றலை பெருக்கவும், மழையினால் பால் உற்பத்தி குறையாமல் இருக்கவும், கறவை மாடுகளுக்கு உலர் தீவனத்தை தேவையான அளவு (ஆதாவது மாட்டின் எடையில் 3%) அளவு கொடுக்கவேண்டும்.

## குறுஞ்செய்தி :

தொடர்ந்து மேகமூட்டமான வானிலை காரணமாக. கொடிவகை காய்கறி பயிர்களில் சாம்பல் நோய் பரவலாகக் காணப்படும். இதனை கட்டுப்படுத்த டைனோகாப் 1 மில்லி /லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பாசிப்பயறு | 2% டி.எ.பி (20 கிராம் /லிட்டர் தண்ணீர்) கரைசலை பூக்கும் தருணத்தில் தெளிக்கவேண்டும். இதனால் பூக்கள் நன்கு பிடித்து பயறு வகைப் பயிரில் நல்ல விளைச்சலும் தரமான மகசூல் பெறலாம். |
| நெல் | தற்போது நிலவும் வானிலையின் காரணமாக சம்பா நெல்லில் ஆனைக்கொம்பன் ஈ தென்படுகிறது. இதன் காரணமாக பயிரின் குருத்து பகுதி வெங்காய தாள் போல் மாறி கதிர் வெளிவராது. இதனை கட்டுப்படுத்த தயமெதொக்சாம் 25 % குருணை 100 கிராம்/எக்டர் என்ற அளவில் பயன்படுத்தவும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தக்காளி | மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் தக்காளியில் வீரிய ஒட்டு ரகங்களுக்கு 20 மீட்டர் உயரமுள்ள மூங்கில் குச்சிகளை பயன்படுத்தி முட்டு கொடுக்க வேண்டும் இதனால் பழங்கள் மழைக்காலங்களில் மண்ணை தொட்டு அழுகுவது தவிர்க்கப்படுகிறது. |
| வாழை | நிகழும் வானிலையின் காரணமாக வாழையில் கிழங்குகளை தாக்கும் கூன் வண்டு வரவாய்ப்புள்ளதால், இதன் அறிகுறிகளான பாதிக்கப்பட்ட வாழைமரங்கள் இலைகள் மஞ்சள் நிறமாகி, வளர்ச்சி குன்றி, வேர் பாதிக்கப்பட்டு, மகசூல் குறையும். இதனை கட்டுப்படுத்த ஒரு மரத்திற்கு 5 கிராம் பிப்ரொனில் 0.3% குருணைமருந்தினை ஒரு ஏக்கருக்கு 10 கிலோ மணலுலோடு அல்லது யூரியாவோடு கலந்து செடிக்கு செடி ஒரு கைப்பிடி அளவிற்கு வேரைச் சுற்றிலும் தூவி நீர் பாய்ச்ச வேண்டும். |
| வாழை | அதிக மேகமூட்டம் மற்றும் காற்றின் ஈரப்பதம் காரணமாக வாழைத்தாரில் நுனி சாம்பல் அழுகல் தென்பட வாய்ப்புள்ளதால் இதனை கவனித்து தேவைக்கு ஏற்ப மேன்கோசெப் மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் அளவில் கலந்து தெளிக்கவும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | பருவ மழை தொடங்குவதற்க்கு முன்னர் கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கான தடுப்பூசி அளிப்பதனை உறுதி செய்து கொள்ளவும். |
| பசு | கால்நடைகளுக்கான புரத சத்து மிக்க அசோலாவை தீவனத்துடன் கலந்து அளிப்பதால் தீவன செலவு குறைவதுடன் கால் நடைகளின் உற்பத்தி திறன் மேம்படுகிறது. |
| வெள்ளாடு | நிலவும் பருவ சூழ்நிலையில்ஆடுகளுக்கான துள்ளுமாரி நோய் தடுப்பூசி 6 மாத வயதில் அதனைத் தொடர்ந்துந் ஒவ்வெருஆண்டும் மழைக் காலத்திற்கு முன்னர் ஒரு முறையும் , குட்டிட் ஈனும் பருவங்களில் தாய் ஆடுகளுக்கு தடுப்பூசி அளித்தல் மிகவும் அவசியம். |